# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 02.09.2023**

**அசல் வழக்கு எண். 316/2011**

**வா.சா.3 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 9,10,12 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.ஏ. தமிழ் படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமுலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எதனடிப்படையில் நான் சொன்னேன் என்றால் என்னுடைய ஆவணம் அடிப்படையில் நான் சொன்னேன். எனது தரப்பில் மொத்தம் எத்தனை ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் 5 ஆவணங்கள் தாக்கல் செய்தேன். நான் இந்த வழக்கில் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 4,5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் ஒப்புக்கொண்டு வழக்காடி வருகிறேன் என்றாலும் எனது தரப்பில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதி தன்ராஜ் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேன். நான் கிரையம் வாங்கிய சொத்து தன்ராஜ் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தனராஜ்க்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று ஊரில் விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். நான் தாக்கல் செய்துளள் பி.வா,சா.ஆ.11 என் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தில் எனக்கு கிரையம் கொடுத்த தன்ராஜ்க்கு அந்த சொத்து பாக பத்திரப்படி பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 11 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாக பத்திரத்தை தாக்கல் செய்தால் தனராஜ்க்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என தெரியவரும் என்றால் சரிதான் . நான் தனராஜ்மிடமிருந்து சொத்தை கிரையம் வாங்கிய போது அவர் பெயரில் இருந்த வருவாய் ஆவணங்களை நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து தனராஜ்க்கு பூர்வீக சொத்தா அல்லது சுயாஜித சொத்தா என்று எனக்கு தெரியாது. நான் அவரிடமிருந்து கிரைய

வாங்கிய பிறகு தான் சொத்தை பற்றி எனக்கு தெரியும். தனராஜ்க்கு ஒரே ஒரு மகன். அவர்தான் இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ-4 ஆவணத்தில் தனராஜ்ம் அவருடைய மகனான 2ம் பிரதிவாதியும் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுததுள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு மேல்புறம் 10 செண்டை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தில் தனராஜ்க்கும் 2ம் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கும்போது தனராஜ் என்பவரிடம் மட்டும் கிரையம் வாங்கியுள்ளதால் என்னுடைய கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. 4 ,6 பிரதிவாதிகிள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றதை பற்றி எந்த விபரமும் சொல்லவில்லை என்றாலும் அதனால் என்னுடைய வழக்கு செல்லாது என்றாலும் சரியல்ல. தனராஜ்க்கும் அவருடை ய தகப்பனாருக்கும் இடையே நடந்த பாக பத்திரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என் பெயரில் பட்டா மாற்றம் செய்து பிறப்பித்த உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவை நான் தாக்க்ல செய்யாததால் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-12 முதல் 15 வரையிலான பட்டா அ. பதிவேடு வரைபடம் மற்றும் வரி ரசீதுகள் செல்லது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 முதல் 15 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி. வா.சா.ஆ-11 முதல் 15 வரையிலான சான்றாவணங்கள் பற்றி 4,6 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3) இறந்துபோன 7,8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டட சொத்தை தனராஜ் என்பவரிடமிருந்த நாங்கள் கிரையம் வாங்கியதால்தான் அந்த ஆவணத்தை பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் 12 1/2 செண்ட்டை நீக்கி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 12 1/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த 12 1/2 செண்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என நான் தனராஜிடம் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு

நான்கு புற மால்களில் யார் நிலம் உள்ளது என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் பற்றி எந்த கூடுதல் வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் உரிய நபர்களிடமிருந்து கிரையம் பெற்வில்லை என்றாலும் அதனை தொடர்ந்து என் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இதர ஆவணங்கள் செல்லது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு பக்கத்தில் மயானம் உள்ளது என்றால் சரிதான். அந்த மயானம் நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு 1/2 கி.மீட்டர் தள்ளி உள்ளது. நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு நான்கு புற மால்கள் சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியாது. வழக்கு சொத்தை ஒட்டி ராஜபாளையம் கோவில்பட்டி பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கம் மயானம் உள்ளது. 7,8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தை நான் தனராஜ்மிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளதால் நான் வாங்கிய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.